உ
சிவமயம்

News
aperin Ceylon
P. M. G. NO. H. A
89/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருகூ] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஹூ ஆவணி மீ உஎ உ (1947 செப்டம்பா 12 வெள்ளிக்கிழமை) [இல சரு

### பிரார்த்தனை

நின்பாத தாமரைக் கன்பேது மின்றிய நீசன், பொல்லேன்
புன்போத மேலிட்ட பொய்யேன் பிழையைப் பொறுத்தருளாய்
அம்போ ருகமலர் ஓராறலர்ந்த அருட்கடலே!
செம்போரி வேலவனே! இமையோர்கள் சிகாமணியே!

—சிதம்பா சுவாமிகள்.

## காந்தி உருவச்சிலை

### நிறுவுவதற்கு வேண்டுகோள்

கொழும்பு ஹல்ற்ஸ்டோர்ப் 156ம் இலக்கத்து வீட்டில் வசிக்கும் திரு எஸ். சிவசுப்பிரமணியம் அவர்கள் பின்வருமாறு எழுதுகிறார்:

மகாத்மா காந்தியின் உருவச்சிலையொன்றை பம்பாய் நகரத்தில் நிறுவ ஆலோசனை செய்யப்பட்டிருக்கிறதல்லவா? அவ்விதமே இலங்கையிலும் அவரது சிலையொன்றை நிறுவவேண்டுமென்ற ஆர்வம் எங்களிற்சிலருக்கு ஏற்பட்டிருக்கிறது. காந்திஜியின் குணிசயங்கள் ஆயிரக்கணக்கான இலங்கை மக்களுக்கும் இலங்கையின் தேசிய அபிவிருத்தி இயக்கத்திற்கும் சிறந்த ஊக்கத்தை யூட்டியுள்ளன. அந்தமகானின் சிலையொன்றைஇங்கு நிறுவுவதுதான் இலங்கை மக்கள் செய்யக்கூடிய மேலான கைங்கரியம் சகல வகுப்புகள், பிரிவுகள், கட்சிகள் ஆகியவைகளின் தலைவர்கள் இந்த விஷயத்தில் ஒத்துழைத்து உலகப் பெரியாராகிய உத்தமர் காந்தியடிகளின் ஞாபகம் இலங்கையின் எதிர் கால சந்ததியார்களிடமும் நிலைபெற்றிருக்கச் செய்வதற்கு உதவிபுரிவார்களென நம்பப்படுகிறது.

## காந்திஜீக்கு மன்னர் செய்தி

மகாத்மாகாந்தி கல்கத்தாக் கலவரம் சம்பந்தமாக உண்ணுவிரதமிருந்தபோது மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் ஆறுவது ஜோர்ஜ் காந்திஜியின் சுகம் விசாரித்து ஓர் செய்தி அனுப்பியிருந்தார். அந்தச் செய்தியில், இந்த நேரத்தில் உண்ணுவிரதம் மேற்கொள்ள நிச்சயித்ததை யிட்டுத் தாம் கவலைப்படுவதாகவும், இறைவன் அருளால் அவ்விரதம் சீக்கிரமே பூர்த்தியாகும் எனத் தாம் நம்புவதாகவும் மன்னர்பிரான் குறிப்பிட்டிருந்தார்.

மகாத்மா தமது உண்ணுவிரதத்தைப் பூர்த்திசெய்யும் சந்தர்ப்பத்தில் மன்னர்பிரான் செய்தி அவரிடம் சமர்ப்பிக்கப்பட்டது; அதனைக் கண்ணுற்ற அடிகளார், மன்னர்பிரான் தம் விஷயத்திற் காட்டியுள்ள சிரத்தையின் பொருட்டு மகிழ்ச்சி காட்டினார்,

## காந்திய சமதர்மம்

### எமக்கு வேண்டிய அரசியற் கட்சி

குரும்பசிட்டி திருவாளர்கள் க: சபாரத்தினம், மு. பொன்னையா என்பவர்கள் பின்வருமாறு எழுதுகின்றனர்:—

யாழ்ப்பாணத்தில் ''ஓர் புதிய அரசியற்கட்சி'' தங்கள் 2-9-47ல் வெளிவந்த 'இந்துசாதன'ப் பத்திரிகையில் காட்டியவண்ணம் ஆரம்பமாகவிருப்பதையிட்டுப்பெருமகிழ்ச்சி எய்துகின்றோம். இதை வரவேற்க எங்களைப்போன்ற பலர் இருக்கின்றனர். உணர்ச்சியிருந்தும் அது எவ்விதம் எங்ஙனம் நடைமுறையில் இயங்குமென்று மம் தத்தளித்துக்கொண்டிருந்தஎங்கள்போன்றவர்களுக்கு இது ஓர் ஆறுதலளிக்கும் செய்தி.

இந்தியத் தலைவர்கட்குள் தலைசிறந்தவரும் சமதர்மக்கொள்கைகளையே அஹிம்சா முறையில் சாதித்து வருபவருமாகிய மகாத்மாவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றியே புது அரசியற் கட்சியின் லட்சியங்களை அமைத்துக் கொள்வது நன்றாகும்.

கட்சியின் லட்சியங்கள் நன்றாகவிருந்தும் நடத்துபவர்கள் சுயநலமிகளாகவிருந்தால் அக்கட்சி நிலைத்து நிற்கமாட்டாது. சென்னை பிரகாசம் மந்திரிசபையையுற்றுநோக்குவோம், சுயநல மேலீட்டினால், கட்சி லட்சியங்களையும் சிதறடித்து, பொதுநல சேவைகளையும் பாழாக்கி, பிரகாசம் மந்திரி சபையையும் கவிழ்த்தனர் போலிப் பிரதிநிதிகள். மேற்படி விபத்து நேரிடாவண்ணம் புது அரசியற் கட்சியை அமைத்தல் மிகவுஞ் சிறந்தது;

காந்திய சமதர்மத்தைஅடிப்படையாகக் கொள்வதானல், எவ்வித அவமானத்தையும் நீக்கவல்லதும், சுயமரியாதையை நிலைநாட்டுவதற்குரியதும், எங்களனைவரின் மானத்தைத் தேசிய முறையில் காப்பாற்றக் கூடியதும், சிறிய முதலுடன் ஆரம்பிக்கக்கூடியதும், வறுமைப் பிணியைப் போக்கவல்லதுமான புனித நூல்நூற்றலைப் பிரமுகர்களும், ஊழியர்களும் சிரமேற் கொள்வது இன்றியமையாததாகும்.

இந்தியவிடுதலையின் சாத்வீக கர்மகர்த்தாவாகிய காந்தியடிகளின் ஜெனனவிழாவின்போது இப் புதிய அரசியற் கட்சி அனுதாபிகள் அனைவரும் ஒருங்குகூடி புனராலோசனை செய்து கொள்வது வேண்டற்பாலது. இத்தினத்தில் கட்சி நோக்கத்துடன் கூடிமூவோரனைவரும் நூல் நூற்றலில் கலந்துகொள்வது விரும்பத்தக்கது, இதற்குதவியாக இம்மாதம் 20-9-47 சனிக்கிழமை தொடக்கம் பத்து நாளைக்கு நூற்பயிற்சி கொடுக்கமுன் வந்திருக்கின்றோம்.

இடம்: கதர் ஸ்தாபனம், குரும்பசிட்டி தெல்லிப்பழை.

தங்க விரும்புவோருக்கு அவர்கள் செலவில் தகுந்த வசதிகள் செய்து கொடுக்கப்படும். விரும்புவோர் காலதாமதமின்றி விண்ணப்பித்துக்கொள்ளவும்.

## ஏன் கூடாது?

### மதமும் இக்காலப் போக்கும்

(கவிராஜ பண்டிதர் கா. கனகராஜ ஐயர், B. O. L.)

(முற்றொடர்)

நான்காம பிராகாரம்வரையில் வந்தவர்கள் பேசுகிறார்கள். சாஸ்திரங்களைச் சக்கையும் சாறுமாய்ப் பிரிக்கிறார்கள். வாதம் பிரதிவாதம்பேசி எதிர்வாதியை எப்படி வெல்வது என்பதே நினைவாக இருக்கிறார்கள். ஐந்தாம் பிரகார வாயில் இவர்கள் கண்முன்னே நின்றும் அதை இவர்கள் திரும்பிப் பார்ப்பதில்லை. வாதம் ஒடுங்கி அந்த வாயிலை இவர்கள் பார்க்க எவ்வளவுகாலம் ஆகுமோ? ஐந்தாம் பிராகாரம் வரையில் வந்தவர்கள் சின்னங்கள் நிறையப் பூண்டு காலம் தவறாமல் மணியடித்துப் பூசை பண்ணி முணு முணுத்துக்கொண்டு நம்மைப்போன்ற நிலைமை யடைந்தவர் வேறு யாரும் இருக்கமுடியாது என்ற நினைவிலேயே இருக்கிறார்கள். இந்த நினைவு மாறும்போது இவர்களுக்கு உள்நுழையும்வழி புலப்படலாம். ஆறும் பிராகாரத்தில் நிற்பவர்கள் மற்றவர்களை நிந்திப்பதே மதத்தின் உயர்வான முடிவு என்ற நிலையில் இருக்கிறார்கள். தம் அறிவு அறிந்த உண்மைகளைப் பிறர் அறியவில்லையே என்ற இரக்கம் இவர்களுக்கு இல்லை. இகழ்ச்சியே உண்டு. இந்த உணர்ச்சி நீங்கும்வரையில் இவர்கள் உள்ளேபோக இயலாது. ஏழாம் பிராகாரத்தில் உள்ளவர்களுக்கு மதத்தைப் பற்றிய தெளிவான உணர்ச்சி இல்லை. இது உண்மையோ அது உண்மையோ எவ்வழியாக நாம் நுழையலாம் என்ற எண்ணமே உண்டு. சிறிது தெளிவு பிறந்ததும் இவர்கள் அகத்தே புகலாம். இந்த ஏழு பிராகாரம் வரையில் வந்த மனிதர் தொகை உலக மனிதர் தொகையில் மிகவும் குறைவே என்பதை நாம் உணரவேண்டும். இப்பிராகாரங்களுக்கு வெளியில் நிற்பவரே பெரும் பகுதியார் என்பதையும் உள்ளே நுழைய முயலுபவர் மிகவும் சிறு பகுதியாரே என்பதையும் நாம் நன்றாய் உணரவேண்டும்.

இத்தனை காவலையும் கடந்து அரணுக்குள் மறைந்திருக்கும் அரும் பொருளை அறிந்து அனுபவிப்பவர் அதன் தன்மையை வெளியிட இயலாது என்ற ஒரு நம்பிக்கை நம் மதத்தில் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. இந்த நம்பிக்கை எத்தனை உறுதியுள்ளது என்பது இன்றளவும் அது நிலைத்திருப்பதாலேயே நாம் அறியத்தக்கதாம். கண்டதாக யாராவது ஏதாவது சொன்னால் அது உண்மைக் காட்சியாகாது என்பதே நம்பிக்கையாம். இத்தனைபெரிய கோட்டை கட்டி நூற்றுக்கணக்கான பூட்டுக்களைப்பூட்டி வைத்திருக்கும் தெய்வம் இந்தக்காவலையெல்லாம் தாண்டி வெளியே வந்து, நெருங்கி வரமுடியாது தவிக்கும் ஏழைகளையும் பார்க்கத் திருவுள்ளம் கொள்ளுவதுண்டு. அந்த அவசரமே அவதாரக்கோலம் என்று நமது மதம் சொல்கிறது. இப்படி அநேகவிதமான கட்டுக்காவலோடு இருக்கும் காரணத்தால் தான் நம் மத உண்மைகள் பொது மக்களுக்கு நன்றாய்த் தெரிய வழியில்லாமல் போய்விட்டது.

இப்படி மறைந்து கிடக்கும் மதவுண்மைகளை எளிதாக எல்லாரும் அறியும்படி தெரிவிக்க வழி என்ன என்று சிறிது பார்ப்போம். நமக்கெல்லாம் பழக்கம் அதிகமாகவுள்ள சைவமதத்தைஎடுத்துக்கொள்வோம். இந்த மதத்துண்மைகளை எடுத்துரைக்கும்சாஸ்திரங்கள் வடமொழியிலும் உண்டு. தமிழிலும் உண்டு. வேதத்தைச் சைவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். வேதத்திலுள்ள உபநிஷத் என்ற பகுதியே தெய்வ தத்துவத்தைத் தெளிவாக உரைப்பது. அதன் கருத்தையொட்டி வியாசர் எழுதிய பிரமசூத்திரம்உண்டு. அதற்குச் சைவபரமாக ஒரு பாஷியம் அமைந்திருக்கிறது அந்த பாஷ்யத்துக்குச் சில வியாக்கியானங்கள் உண்டு. கீதைக்கும் சைவநெறியொட்டிய உரை இருப்பதாகச் சொல்கிறார்கள். இவையெல்லாம் வடமொழி பயின்றவர்களுககே பயன்படக் கூடியவை. தமிழகத்தில் தமிழ் மக்களுக்கு முக்கிய மதமாக உள்ள சைவத்தின் உண்மைகளை அறிய அவர்கள் வடமொழி கற்றுக்கொள்ளவேண்டும் என்று விதி விதிப்பது நியாயமாகாது. எபிரேயபாஷையில் பைபிள் போற்றப்பட்டபோது எத்தனைபேர் அதன் உட்கருத்துக்களை அறிந்தார்கள். இன்று உலகத்து மொழிகளிலெல்லாம் மொழி பெயர்க்கப்பட்டிருக்கும் பைபிளை எத்தனைபேர் படிக்கிறார்கள். இதுபோல இந்த வடமொழிச் சாத்திரங்களைத் தமிழ்மயமாக்கிவிட்டால் நமது மதத்தைப்பற்றி இவற்றில் என்னதான் சொல்லியிருக்கிறது என்பதை எல்லாரும் எளிதில் அறியலாமே. மூடுமந்திரமாக வைக்கும் வரையில்தானே ஒரு கூட்டத்தார்க்கு அதைக் காப்பாற்றும் பொறுப்பும் மற்றவர்களுக்கு அதைக் கண்டு வெறுப்பும் உண்டாகின்றன. வடமொழியில் உள்ள சாஸ்திரங்கள் தான் இப்படி என்றால் தமிழில் உள்ளவையாவது தெளிவாக இருக்கின்றனவா என்று கேட்டால் அவையும் வடமொழிப்போர்வை போர்த்துக் கொண்டு வருகின்றன. சிவஞானபோதத்துக்கு உள்ள திராவிட மகா பாஷியம் தமிழ்நடையிலேயே அமைந்திருந்தாலும் சாதாரணமாகத் தமிழ்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேஷ விஞ்ஞாபனம்

நல்லூர்க் கந்தசுவாமிகோயில் தேர் தீர்த்த தரிசனத்தின் பொருட்டு நாளைத்தினமும் (13-9-47) அடுத்த தினமும் (14-9-47) இச்சைவப்பிரகாச யந்திரசாலை இந்துசாதனலய மிரண்டிலும் கடமைபார்ப்போர்க்கு விடுமுறை உதவப்படுதலால், குறித்த இருதினங்களிலும் இங்கே எவ்வகையான கருமங்களும் நடைபெறா வெனவும், அடுத்த செவ்வாய்க்கிழமை (16-9-47) இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரசுரங்கள் வெளிவரா எனவும் அபிமானிகட்குத் தெரிவிக்கின்றேம். —மனேஜர்.

---

THE SAIVAPRAKASA PRESS

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஷு

ஆவணிமீ உஎ௨ வெள்ளிக்கிழமை

## ஐக்கிய சங்கக் கடைகள்

இந்த யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள ஐக்கிய சங்கக் கடைகள், தங்களுக்கு விரைவிலே முடிவு நேருமென்று அஞ்சியோ இல்லையேல் வேறு காரணம் பற்றியோ, யாமறியேம், இப்பொழுது சோர்வடைகின்றன வென எண்ணக் கிடக்கின்றது. ஐக்கிய சங்கக் கடைகள் சிலவற்றிற்கு மாறான முறைப்பாட்டுக்டுக் கடிதங்கள் பல, காலந்தோறும் இப்பத்திரிகையில் வெளியிடும் வண்ணம் அனுப்பப்படலாயின; அவை நிசமோ, இல்லையேல் ஒவ்வோர் குரோதம் பற்றியெழுதப்பட்ட கடிதங்களோ என்பதை உள்ளபடியுணர முடியாமையினலே, அக்கடிதங்கள் இப் பத்திரிகையில் இடம் பெருதொழிந்தன; இப்படியான முறையீட்டுக் கடிதங்கள் சிலவற்றை அக்கடிதர்கள் நமக்கு நேரிற் கொண்டுவந்து பத்திரிகையில் வெளியிடும்படி தந்தபோது, ஐக்கியசங்கம் கூட்டுறவு முயற்சி யென்னு மிவைகளை யிட்டுப் பெரிதும் பிரசாரஞ் செய்வதாகிய "ஐக்கிய தீபம்" என்னும் துவிமாசாந்த வெளியீட்டில் இக்கடிதங்களை நீங்கள் வெளியிடலாகுமே, அவ் வெளியீட்டின் அதிகாரிகள் உங்கள் முறையீடுளை யறிந்தால், அவற்றை நீக்குவதற்கு வேண்டியவற்றைச் செய்வார்களே என நாம் சொன்னபோது, அக்கடிதர்கள் "அப்படியல்ல, அப் பத்திரிகையில் ஐக்கிய சங்கக கடைகளுக்கு மாறான முறையீடுகளை வெளியிடமாட்டார்க"ளென ஆருடஞ் சொல்லுகிறுர்கள்; அவர்கள் கூற்று மெய்யோ அன்றோ என்பது மேற்படி பத்திரிகை யதிகாரிகளைக் கேட்டறிய வேண்டியது.

சங்கக் கடைகளுக்கு மாறாக எழுதி யனுப்பப்பட்ட கடிதங்கள் சிலவற்றை யெடுத்து ஆராய்ந்து பார்த்தபோது, அக்கடிதர்களுட் சிலர், முந்தி ஒரு சங்கக் கடையில் மனேஜராயிருந்து நீக்கப்பட்டவராகவும், இன்னெருகடிதர், அப்படியான கடையில்விற்பனவு செய்வோராயிருந்து விலகியோ விலக்கியோ யுளளவராகவும், வேறு சில கடிதர்கள் கடைகளை நடத்தும் ஐக்கிய சங்கத்திலே அங்கத்தவராகச் சிலகாலஞ் சேர்ந் திருந்து பின்னர் முரண்பாடு காரணமாகத் தாமாக அச் சங்கத்தை விட்டகன்றோ, இல்லையேல் அகற்றப்பட்டோ உள்ளவரென அறியக் கிடக்கின்றது.

ஆனல், மேலே சொல்லப்பட்ட தொடர்புக ளில்லாதவராய், சங்கக்கடையிலே பங்காளராய், கொள்ளல் செய்பவராயுள்ள ஒருவர் இருவருடைய முறையீட்டுக் கடிதங்களும் கிடைத்துள்ளன; அம்முறையீடுகளிற் சிலவற்றைத் தொகுத்து இங்கே வெளியிடுதலினலே நன்மையுண்டாதலுங்கூடும்; ஒருவர் ஒரு குறித்த சங்கக் கடையைச் சுட்டி, அக்கடையிலே யுள்ளார் அதிகாரங் காட்டுகின்றுர்களென்றும், அவர்கள் வாயில் வன்சொல்லன்றி இன்சொற் பிறப்பது அத்தி பூத்தவாறுகுமென்றும், பண்டம் வாங்கப் போபவர் சற்று அவசரப்பட்டால், அவரையே இயன்றவரையில் தாமசப் படுத்திப் பின் பண்டம் வழங்குகிறுர்களென்றும், பண்டம் விற்போர் சிலர் கண்டுங் காணுதார் போலவும் கேட்டுங் கேளாதார் போலவும் நடிக்கிறுர்களெனவும் முறையீடு காணப்படுகின்றது; உண்மையாக இப்படி யாரும் சங்கக்கடைகளிலிருந்தால் அவர்கள் திருந்தி இதமாய் நடப்பது கொள்வோர் கொடுப்போ ரென்னும் இருபாலார்க்கும் நன்மை பயப்பதாம்,

மற்றெருகடிதர் தாம் பற்றுவரவு செய்யுஞ் சங்கக் கடையிலே மாசக் கணக்கில் கூப்பனுக்குத் தானும் மண்ணெய் கொடுக்கப்படவில்லை யெனவும், மண்ணெ யில்லாமல் தாம் விளக்கெரிப்பதற்கு என்ன செய்வதென்று வினவியபோது, "அங்கே தந்தாற்றுனே எண்ணெய் உங்களுக்கு நாங்கள் தரமுடியும்; வேணுமானல் மேலதிகாரிகளுக்கு எழுதிக்கொள்" என்று தம்மைக் கடிந்தாரெனவும், மற்றைக் கடைகளில் மண்ணெய் கூப்பனுக்குக் கொடுக்கிறுர்களே யெனத் தாம் கேட்க, "அதைப்பற்றி எங்களுக்குத் தெரியாது, எண்ணெய் வந்தாற்றுன் தருவோம்" என மேற்படி சங்கக்கடை மனேஜரே பதில் சொல்லுகிறுராம்; கூப்பன்மூலமாகப் பெறவேண்டிய மண்ணெய் முதலிய பண்டங்கள் தம் கடைகளைத் தேடிவந்து சேராவிட்டால், கடையில் மனேஜரா யிருப்பவர், இல்லையேல் அச்சங்கத்தி லுள்ள பிரதான உத்தியோகத்தர் அப்படியான பொருள்களை, கொள்வோரின் நன்மையை உத்தேசித்துச் சிறிது சிரமப்பட்டேனும் வாங்கிக்கொண்டு வந்து கடையில் வைத்து விற்பதுதான் ஐக்கிய சங்கக்கடைகளுக்குச் செய்யும் நன்மையான முறையாகும்.

இப்படியான முறையீடுகள் இன்னுஞ் சிலவுள; விரிவஞ்சி விடுக்கின்றேம்; இவ்வாறான விபரீதங்கள் சங்கக் கடைகளில் நடப்பது நிசமெனக் கண்டால் அக் கடையை வைத்து நடத்துஞ் சங்கத்தினர் உடனுக்குடன் அவைகளைத் திருத்தி நடத்தற்காகிய முயற்சிகளைச் செய்தல் வேண்டும். அரிசி முதலாம் பொருள்களின் கட்டுப்பாடு அறவே ஒழிந்தபின் இச்சங்கக் கடைகள் நடைபெறுமா என்பது சந்தேகம்; நடைபெற வேண்டுமென விரும்பினல், மேலே சொல்லப்பட்ட குறைகளை நீக்கிக் கொள்வோர் கொடுப்போ ரென்னும் இருபகுதியார்க்கும் நன்மை பயக்கும் முறையிலேதான் கடைகளை நடாத்துதல் அவசியமாகும்; சோர வியாபாரக் கருமஞ் செய்வோர் பொருள் விலையொன்றில் சற்று அதிகமாக நிற்கின்றுர்களே யொழிய, இன்சொற் பேசுதல் தம்மிடம் வருவோரிடத்து இதமாக நடத்தல் முதலிய குணங்களோடுஞ் செயல்களோடுங் காணப்படுகின்றனரென, அவர்களுடன் ஊடாடுவோர் சிலர் சொல்லக் கேட்டுள்ளேம்; சங்கக் கடைகள் சிலவற்றிற்கு மாறாக இப்படியான முறைப்பாடுகளுள வெனினும், நல்லமுறையில் இப்பொழுதும் வைத்து நடத்தப்படும் சங்கக் கடைகள் சிலவற்றை நாம் நேரில் அறிவேம்.

---

### மைசூர் பணிந்தது

மைசூர்ச் சமஸ்தானம் தன் பிரஜைகளின் கோரிக்கைக்குப் பணிந்துவிட்டது. தமது மக்களுக்குப் பூரண பொறுப்பாட்சி நல்க மைசூர் மன்னர் இணங்கி இப்போது ஓர் பிரகடனம் வெளியிட்டிருக்கிறுர். அச் சமஸ்தானத்திற் பூரண பொறுப்பாட்சி வேண்டிச் சத்தியாக்கிரகம் நிகழ்ந்ததும் பல சமஸ்தானக் காங்கிரஸ் தலைவர்கள் சிறைப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாம். மைசூர் சமஸ்தானம் கைத்தொழில் விவசாயத்தாற் சிறந்தது இந்தியாவிலே மைசூரில்தான் அநேக தங்கச் சுரங்கங்கள் உள. கொச்சி, திருவாங்கூர், மைசூர் என்னும் பிரதான சமஸ்தானங்கள் தம் பிரஜைகளின் கோரிக்கைக்கு இணங்கிவிட்டன. ஹைதராபாத் நிஸாம் இனி என்ன செய்வார் என்பது இருந்தறியவேண்டியது.

---

தேர்தல் முடிவு:

## ஐக்கியதேசீயக்கட்சி முன்னேறுகிறது

### சமசமாஜிகள் தோல்வி

சென்ற திங்கட்கிழமைத் தேர்தல் முடிவுகள் வருமாறு:

வவுனியாவில் திரு. வி. சுந்தரலிங்கம் தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகரான திரு. த. மு. சபாரத்தினத்தை 2008 வாக்குகளால் வெற்றி கொண்டார்.

இரண்டு அங்கத்தவர்களைத் தெரிவு செய்யும் தொகுதியான கடுகணுவையில் ஐ. தே. கட்சியைச் சேர்ந்த மிஸ்ரர். இ. ஏ. நுகவெலையும் சுயேச்சைவாதியான மிஸ்ரர் H. R. U. பிரேமச் சந்திர என்பவரும் வெற்று யடைந்தனர். இங்கே போட்டியிட்ட சமசமாஜி உட்பட 7பேர் தம் கட்டுப் பணத்தை இழந்தனர்.

பெலியத்தைத் தொகுதியில் மிஸ்ரர் D. A. ராஜபக்ஷி என்னும் ஐ. தே. கட்சியாளர் தெரிவு செய்யப்பட்டார். இங்கும் சமசமாஜி ஒருவர் தோல்வி யடைந்தார்.

தலவாக்கொல்லையில், இலங்கை இந்தியக் காங்கிரசைச் சேர்ந்த திரு. வி. வி. வேலுப்பிள்ளை, தமக் கெதிராக நின்ற சமசமாஜி உட்பட 3 அபேட்சகரை வெற்றி கொண்டார். சமசமாஜக் கட்சியைச் சேர்ந்தவரும் இன்னெருவரும் கட்டுப் பணத்தை யிழந்தனர்.

சென்ற புதன்கிழமை நிகழ்ந்த தேர்தல் முடிவுகள் வருமாறு:

பலாங்கொடையில் மிஸ்ரர். ஏ. எப். மொலமுரே, மிஸ்ரர். சி. டபிள்யூ. மத்தியூ என்னும் இரு ஐ. தே. க. அபேட்சகர்கள் வெற்றிபெற்றனர்.

வெலிமடையில் மிஸ்ரர் கே. டொன் சுகததாஸ என்னும் சுயேச்சைவாதி 22 வாக்குச் சம்மதங்களால் வெற்றிகொண்டார்.

கலவேவாவில் மிஸ்ரர். எஸ். மகதில்வேவ என்னும் ஐ. தே. க. அபேட்சகர் வெற்றி கொண்டார்.

தண்டகமுவையில் மிஸ்ரர். ஆர். ஏ. இரியகலை என்னும் சுயேச்சைவாதி வெற்றி கொண்டார்.

#### கட்சிநிலை வருமாறு:

| | |
|---|---|
| ஐ. தே க. | 21 |
| சமசமாஜக் கட்சி | 8 |
| தமிழ்க் காங்கிரஸ | 5 |
| இந்தியக் காங்கிரஸ | 2 |
| போல்ஷெவிக் லெனின் கட்சி | 3 |
| சமதர்மக்கட்சி | 1 |
| சுயேச்சை | 7 |
| ஆக. | 47 |

---

# உலகம் பலவிதக் கதை

(முற்றெடர்—30)

### ஏன் சிரிக்கிறீர்கள்?

"என் பாக்கியவதியே! கேட்கிறேனென்று குறையெண்ணுதீர்; அந்த அக்கா உமது உடன்பிறந்த சகோதரியா, இல்லையேற் சகோதர முறை பூண்டுள்ள பெண்ணு?' என்று ஆவலுடன் வினவ, என் உடன் பிறந்த சகோதரமல்ல, அபிமானச் சகோதரி: ஆனல் உடன்பிறந்த சகோதரியைக் காட்டிலும் நூறுமடங்கு அன்பு என் அக்காள் என்மேற் பாராட்டி வருகிறுள்; உடன்பிறந்தார் சுற்றத்தா ரென்றிருக்கவேண்டா, உடன் பிறந்தே கொல்லும் வியாதி—உடன் பிறவா, மாமலையிலுள்ள மருந்தே பிணிதீர்க்கும், அம்மருந்து போல் வாருமுண்டு" என்று பாட்டுப் படிப்பீர்களல்லவா? அந்தப் பாட்டிலே சொல்லப்பட்ட மாமலையிலுள்ள மருந்தென்று சொல்லலாம் என் அக்காளை" என மனமுருகச் சொன்னுள் பாக்கியலட்சுமி; "அப்படியானல், அந்த [illegible] தாயல்லவா" என்று அவளோடு கணவன் கேட்க, மனையாள், இல்லையென்று பதில் சொல்லித் தன் வரலாற்றையும், கண்ணகியம்மை சிவபாக்கிய மென்னுமிவர்களின் வரலாற்றையும் தான் அறிந்தவரையில் விபரமாகத் தன் நாயகனுக்கு எடுத்துச் சொன்னுள்; நாயகன் கேட்டு ஆச்சரியமடைந்து புன்னகை செய்தான்; அதனையவதானித்த பாக்கியலட்சுமி தன் கணவன் சிரித்தமைக்குக்காரணமென்னவென்பதைச் சிறிது நேரஞ் சிந்தித்தும் அறியமுடியாதவளாய், "ஏன், சிரிக்கிறீர்கள்? நான் சொன்னதில் ஏதுந் தவறுண்டோ?, ஒளியாமற் சொல்லுங்கள்" என்று ஆவலுடன் கேட்க, "நீர் ஒரு தவறுஞ் செய்யமாட்டீர்; அப்படித்தான் செய்தாலும், அது தவறாகமாட்டாது; சும்மா சிரித்தேன்" என்றான்; "காரணமில்லாமல் ஒருபோதுஞ் சிரிக்கமாட்டீர்கள்; சிரித்த காரணத்தை எனக்குச் சொல்ல விரும்புகிறீர்களில்லை; சரி, இனிநான் காரணங் கேட்கவுமில்லை; நீங்கள் சொல்லவும்வேண்டாம்" என்று சொல்லிப் பாக்கியலட்சுமி சிறிது ஊடி

தொடர்ச்சி 5ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த மந்திரசபை

## தமிழ்க் காங்கிரசின் ஒத்துழைப்பை மிஸ்ரர் சேனனாயக்கா நாடுவாரா?

[ நமது அரசியல் நிருபர் எழுதுகிறர் ]

இதுவரை ஏறக்குறைய 50 ஸ்தானங்களுக்கான தேர்தல்கள்தான் முடிந்திருக்கின்றன. இன்னும் 45 தொகுதிகளுக்கான தேர்தல் நடைபெறவிருக்கிறது. ஆனால் இதற்கிடையில், அடுத்த அரசாங்கம் எவ்வாறு அமைக்கப்படும் என்பது பற்றிப் பலவிதமான ஹேஷ்யங்கள் கிளப்பப்படுகின்றன. 'டைம்ஸ்'' பத்திரிகையின் அரசியல நிருபர், தமிழ்க காங்கிரசும் ஐ. தே. கட்சியும் ஒன்றுசேர்ந்து ஓர் மந்திரசபையை அமைக்கக்கூடும் என்று பட்டதும் படாததுமாக ஓர் ஜோசியம் கூறியுள்ளார்; தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ; ஜீ, பொன்னம்பலம் இங்கே தேர்தல் மும்முரமாகவிருந்த காலத்திற் செய்த பிரசங்கத்துக்கும் கடைசியாக யாழ்ப்பாணத்திற்செய்த பிரசங்கத்துக்குமிடையே மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசமிருக்கிறதென்றும். அவர் மிஸ்ரர் சேனனாயக்காவுடன் ஒத்துழைத்து மந்திரசபையை அமைக்க முயற்சிப்பார் என்றும் இங்கே ஓர் சிலர் கூறுகின்றனர். மிஸ்ரர் சேனனாயக்காவையும், ஐ தே. கட்சியையும் பலவிதமாகத்திட்டிக் கண்டித்த திரு. ஜீ ஜீ பொன்னம்பலமும் அவரது சகாக்களும், அவரது வெற்றிக்குப் பின்னர் மிஸ்ரர் சேனனாயக்காவைப்பற்றியோ, ஐ தே. கட்சியைப் பற்றியோ ஓர்வார்த்தையாவது கூறாமல், தாம் சிங்களருடன் ஒத்துழைக்கப்போவதாகக் கூறியதில் அநேக மறை கருத்துக்கள் உண்டு என்று சிலர் பேசிக்கொள்ளுகிறார்கள்.

O

இவ்விஷயமாக நான் சில ஐ தே. கட்சிப் பிரமுகர்களை உசாவியபோது, அவர்கள் ஐ. தே. கட்சி தமிழ்க் காங்கிரசுடன் ஒருபோதும் ஒத்துழைத்து மந்திரசபையை அமைக்கமாட்டாது என்று நிச்சயமாகக் கூறினர். இப்போதுள்ள நிலையில், ஐ. தே, கட்சி குறைந்தபட்சம் 40 ஸ்தானங்களையாவது கைப்பற்றும். எக்கட்சியிலும் சேராத சுயேச்சை வாதிகளின் உதவியும் கிடைக்குமானால், அத்துடன் தேசாதிபதியால் நியமிக்கப்படும் ஆறு பிரதிநிதிகளையும் சேர்த்து மிஸரர் சேனனாயக்கா தமது இஷ்டப்படியே மந்திரசபையை அமைப்பாரன்றித் தமிழ்க் காங்கிரசின் உதவியை மந்திரசபை அமைப்பு விஷயத்தில் நாடமாட்டார் என்று இவர்கள் கூறுகிறார்கள். இன்னும் இலங்கை இந்தியக் காங்கிரஸ், லங்கா சமசமாஜக் கட்சி, போல்ஷெவிக் லெனின் கட்சி என்பவை மந்திரசபை அமைப்பு விஷயத்தில் தமிழ்க் காங்கிரசுடன் ஒருபோதும் ஒத்துழைக்கமாட்டா என்றும் இவர்கள் கூறுகின்றனர். இலங்கை—இந்தியா என்னும் இருநாடுகளுக்குமிடையேயுள்ள பிணக்கு இலங்கைவாழ் இந்தியர் பிரச்சினையை ஆதாரமாகக் கொண்டது. இப்பிரச்சினை மிகவும் திருப்திகரமான முறையில் கூடியசீக்கிரத்தில் தீர்க்கப்பட்டுவிடும். அப்படித் தீர்க்கப்பட்டுவிட்டால் இலங்கைவாழ் இந்தியர்—சிங்கள நாடுகளிலேயே அதிகமாக வசிப்பதால், சிங்களருடன்தான் நேச பான்மையை விரும்புவர் என்றும், தமிழ்க் காங்கிரஸ் வாதிகளுடன் ஒத்துழைக்கமாட்டார்கள் என்றும் கூறப்படுகிறது இவர்களுடைய கூற்றின்படித் தமிழ்க் காங்கிரசைச் சேராத தமிழ்ப் பிரதிநிதிகளுக்கு மந்திரப் பதவி வழங்கப்படலாம். இவ்விஷயமாக ஸ்ரீ வி. சுந்தரலிங்கத்தின் பெயரும், ஸ்ரீ பீ. சரவணமுத்துவின் பெயரும் (அவர் வென்றால்) அடிபடுகின்றன

O

செனேற்சபை விஷயமாகவும் இப்போது பல ஹேஷ்யங்கள் கிளம்புகின்றன. செனேற்சபையில் 30 பேர் அங்கத்தவர்களாயிருப்பர் இவர்களில் 15 பேர் தேசாதிபதியால் நியமிக்கப்படுவர். மீதிப் பதினைந்து பேரும் பாராளுமன்றத்தால் தெரியப்படுவர். ஐ.தே. கட்சி அதிகாரத்துக்கு வருமானால், திருவாளர்கள்: அ. மகாதேவா. ஆர். ஆர் நல்லையா, ரீ. வீ. ராஜரத்தினம், வி. குமாரசுவாமி என்பவர்களில் ஒருவர் அல்லது இருவர் மேற சபைக்கு நியமிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது. பாராளுமன்றத்தினால் தெரிவு செய்யப்படும் 15 பேரில் ஸ்ரீ இ. சிவகுருநாதர் ஒருவராக இருக்கலாம். இவை எல்லாம் இருந்து பார்க்கவேண்டியது.

O

சமசமாஜிகளின் ''வாணம்'' 'புஸ'' ஆய்விட்டதுபோலும். இப்போது சில நாட்களாக நிகழ்ந்துவரும் தேர்தல்களில் அவர்கள் முன்னேறுவதாகத் தெரியவில்லை. நேர்மாறாக அவர்களில் ஓர்சிலர் கட்டுப் பணத்தையும் இழந்துவிட, ஐ. தே. கட்சியினர் ஓரளவுக்கு முன்னேறிவருகிறார்கள். இன்னும், டக்டர் என். எம். பெரீரா ஒருவர்தான் மீந்திருக்கும் பிரபல சமசமாஜி இடதுசாரிக் கட்சியினர் எல்லாருமாகச் சேர்ந்து 20 பேர் வருவரோ என்பது இப்போதுள்ள நிலையிற் சந்தேகம்.

# பிளவு தோன்றியதா?

## சமசமாஜக் கட்சியிலிருந்து மிஸ்ரர் தகநாயக்கா வெளியேற்றம்

காலிப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மிஸ்ரர் தகநாயக்கா, தேர்தலுக்கு முந்தியே சமசமாஜக் கட்சியை விட்டுவெளியேறி, டக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவின் போல்ஷெவிக் லெனின் கட்சியைச் சேர்ந்துவிட்டார் என்று ஐக்கியதேசியக்கட்சிப் பத்திரிகையின் நிருபர் கூறுகிறார். இதன் உண்மை பொய் எப்படியிருந்தபோதிலும் மேற்படி நிருபரின் கூற்றைக் கீழே தருகின்றோம். அவர் எழுதுவதாவது:—

"தனக்கும் சமசமாஜக் கட்சிக்கும் சம்பந்தம் இல்லையென்பதை மிஸ்ரர் தகநாயக்கா பகிரங்கமாகக் காலியிற் கூறிவிட்டார். பாராளுமன்றத்திலே தான் டக்டர் கொல்வின் ஆர். டி- சில்வாவுடன் சேர்ந்தே வேலை செய்யப்போவதாகவும் அவர் தெரிவித்தார். இது சமசமாஜக் கட்சிச் சர்வாதிகாரி டக்டர் என். எம். பெரீராவுக்கு முகத்தில் அறைந்தது போலாகும். மிஸ்ரர் தகநாயக்காவின் குட்டிக்கரணத்துக்குப் பின்வரும் சம்பவமே காரணமாம்.

"மிஸ்ரர் தகநாயக்காவின் சகோதரர் ஒருவர் கொழும்பு மத்தியபகுதித் தேர்தலில் அபேட்சகராக நிற்கிறார்; அவருக்கெதிராக நிற்பவர்களில் சமசமாஜக் கட்சியைச்சேர்ந்த ஆஸ்பத்திரிப் பெரீராவும் (இவர் ஏதோ ஓர் ஆஸ்பத்திரிச் சிப்பந்தியாயிருந்தவர் போலும்) ஒருவர். இந்த ஆஸ்பத்திரிப் பெரீராவைப் போட்டியில் இருந்து நீக்கிவிட்டால், தம் சகோதரர்க்கு இடதுசாரிகளின் ஆதரவு முழுவதும் கிடைக்குமாதலினால், அப்படி அவரை நீக்கவேண்டுமென்று மிஸ்ரர் தகநாயக்கா, டக்டர் பெரீராவைக் கேட்டாராம். இக்தக் கேள்விக்கு டக்டர் பெரீரா மரியாதையாகத் தானும் மறுமொழி கூறவில்லையாம். "இங்கேபாரும். எங்கள் கட்சிக்குக் கட்டுப்பாடு விதிக்க உம்மால் முடியும் என்று நினைக்கவேண்டாம். உம்முடைய சகோதரரிலும் பார்க்க ஆஸ்பத்திரி பெரீரா சிறந்தவர் என்பது ஞாபகமிருக்கட்டும். உம் குடும்பத்தவர் எல்லார்க்கும் நாங்கள் இடங்கொடுக்க முடியாது என்று டக்டர் பெரீரா கடுகடுத்துக் கூறினாராம்.

"மிஸரர் தகநாயக்கா வெறுப்புடன் புறப்பட்டுப் போனார். 'அதிகாரவெறி' 'சர்வாதிகாரத்துவம்' என்றெல்லாம் டக்டர் [illegible] வர்த்தனவின் சகோதரர் [illegible] வர்த்தனுவிற்கு இடம் கொடுத்த கட்சி, தன் சகோதரர்க்கேன் இடம் வழங்கக் கூடாது என்று கேட்டார்.

"இந்தச் சம்பவம் டக்டர் கொல்வின் ஆர் டி. சில்வாவின் காதுக்கு எட்டியது. உடனே அவரும் அவர் சகபாடிகளும் காலிக்குப் படையெடுத்தனர். அதன்பயனாக மிஸ்ரர்தகநாயக்கா நெருப்பிலிருந்து எண்ணெய்க் கொப்பரைக்குள் விழுந்தார்

'இதனை டக்டர் பெரீரா கேள்விப்பட்டார், 'கொல்வின் நல்லாக தககாயக்காவை சேர்த்துக்கொள்ளட்டும். ஆனல், அவர்களிருவரும் பாராளுமன்றத்தில் இடம் பெற்றால்தானே' என்று நையாண்டிசெய்தாராம்."

இது இவ்வாறாக, கொழும்பு டைம்ஸ் பத்திரிகை மிஸ்ரர் தகநாயக்காவின் வாயாடித்தனத்தை அடக்குவதற்கு ஒரே மார்க்கம் அவர்க்கு ஓர் மந்திரிப் பதவி யளித்துவிடுதலேயென்றும் அப்படியளிக்கப்படின் அவர் அதனை நிராகரிப்பார் என்றுஎண்ண [illegible] என்றும் மறைமுகமாகக் கூறுகிறது.

# தமிழன் வாழ்க!

## பாரதியின் வீரம் செறிந்த கடிதம்

காலஞ்சென்ற வீர கவிச் சக்கரவர்த்தி சுப்பிரமணிய பாரதியார் முப்பத்திரண்டு ஆண்டுகளுக்குமுன், சென்னை லோகோபகாரிப் பத்திராதிபர் பரலி சு. நெல்லையப்பருக்கு எழுதியகடிதம் கீழே தரப்படுகிறது அக்கடிதத்தில் பாரதியின் உணர்ச்சி வேகத்தையும், தமிழ்மீதுகொண்டுள்ள எல்லையற்ற ஆர்வத்தையுங் காணலாம். சென்ற 11-9-47இல் தமிழ்நாடெங்கும்கொண்டாடப்பட்ட பாரதி திருநாளையொட்டி வெளியிடப்படும் இக்கடிதம் தமிழ்மக்களுக்குப் புத்துணர்ச்சியும் புத்தூக்கமும் அளிக்குமாக.

எனதருமைத் தம்பியாகிய ஸ்ரீ நெல்லையப்ப பிள்ளையைப் பராசக்தி நன்கு காத்திடுக. தம்பி, மாதத்துக்கு மாதம் நாளுக்கு நாள் நினதறிவு மலர்ச்சிபெற்று வருவதைக் காண்கிறேன். நினது உள்ளக்கமலத்திலே பேரறிவாகிய உள் ஞாயிற்றின் கதிர்கள் விரைவிலே தாக்கி நினக்கு நல்லின்பம்உண்டாகுமென்றேகருதுகிறேன்.

* * *

கெஞ்சம் இளகி விரிகெய்தவிரிவெய்த அறிவிலே சுடர் ஏறுகிறது. நம்மிலும் மெலியார்க்கு நாம் இரங்கி, அவர்களை நமக்கு நிகராகச் செய்துவிடவேண்டுமென்று பாடுபடுதலே நாம் வலிமைபெறுதற்குவழியாகும். வேறு வழியில்லை.

* *

ஹா உனக்கு ஹிந்தி,மராட்டி முதலிய பாஷைகள் தெரிந்திருந்து அந்த பாஷைப் பத்திரிகைகள் என்ன அற்புதமான புதுமை பெற்றுள்ளன என்பதை நேரிடத் தெரிந்துகொள்ள முடியுமானால் — தமிழ் நாட்டிற்கு எத்தனை நன்மை உண்டாகும்! தமிழ், தமிழ் தமிழ் என்று எப்போதும் தமிழைவளர்ப்பதே கடமையாகக்கொள்க. ஆனல் புதிய புதிய உண்மை, புதிய புதிய இன்பம்—தமிழில் ஏறிக்கொண்டே போகவேண்டும்.

* *

தம்பி - நான் ஏது செய்வேனடா! தமிழைவிட மற்றொரு பாஷை சுகமாக இருப்பதைப் பார்க்கும்போது எனக்குவருத்தமுண்டாகிறது. தமிழனைவிட மற்றொரு ஜாதியான் அறிவிலும் வலிமையிலும் உயர்ந்திருப்பது எனக்குச் சம்மதமில்லை. தமிழச்சியைக் காட்டிலும் மற்றொரு ஜாதிக்காரி அழகாயிருப்பதைக் கண்டால் என் மனம் புண்படுகிறது

தம்பி—உள்ளமே உலகம். ஏறு! ஏறு! ஏறு! மேலே, மேலே,மேலே! நிற்கும் நிலையிலிருந்து கீழேவிழாதபடி கயிறுகள்கட்டி வைத்துக்கொண்டு பிழைக்க முயற்சிபண்ணும் பழங்காலத்து மூடர்களைக் கண்டு குடல் குலுங்கச் சிரி உனக்குச் சிறகுகள் தோன்றுக. பறந்து போ. பற! பற! மேலே, மேலே, மேலே!

* *

தம்பி—தமிழ்நாடு வாழ்க என்றெழுது. தமிழ் நாட்டில் நோய்கள் தீர்க என்றெழுது. தமிழ்நாட்டில் வீதி தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் மலிக என்று எழுது.

* *

அந்தத் தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலே நவீன கலைகளெல்லாம், பயிற்சி பெற்று வளர்க என்று எழுது. 'தமிழ் நாட்டில் ஒரே ஜாதிதான் உண்டு—அதன் பெயர் தமிழ்ஜாதி. அது ஆர்ய ஜாதி என்ற குடும்பத்திலே தலைக்குழந்தை என்றெழுது. ஆணும் பெண்ணும் ஓர் உயிரின் இரண்டு கலைகள் என்றெழுது அவை ஒன்றில் ஒன்று தாழ்வில்லை என்றெழுது. பெண்ணைத் தாழ்மை செய்தோன் கண்ணைக் குத்திக் கொண்டான் என்றெழுது.

தொழில்கள், தொழில்கள். தொழில்கள் என்று கூவு. தப்பாக வேதம் சொல்பவனைக் காட்டிலும் நன்றாகச் சிரைப்பவன் மேற்குலத்தான் என்று கூவு. வியாபாரம் வளர்க, யந்திரங்கள் பெருகுக, முயற்சிகள் ஓங்குக. ஸங்கீதம், சிற்பம், யந்திர நூல், பூமிநூல், வானநூல், இயற்கை நூலின் ஆயிரம் கிளைகள் இவை தமிழ் நாட்டிலே மலிந்திடுக என்று முழங்கு.

சக்தி, சக்தி, சக்தி, என்று பாடு.

தம்பி—நீ வாழ்க.

# பாகிஸ்தான் படும்பாடு

## பணம் இல்லை; செலவு அதிகம்

ஏவன் வாளை எடுத்தானோ. அவன் வாளாலேயே அழிவான் எனபது ஓர் பெரிய சித்தாந்தம் அதன் உண்மை இன்று இந்தியாவில் துலாம்பரமாகத் தெரிகிறது சென்ற ஆண்டு ஆகஸ்டு மாதம் 16-ம் திகதி "நேரடி இயக்கம்" என்னும் ஒன்றை ஜின்னு ஆரம்பித்துக் கல்கத்தாவில் தன் குண்டர்களை ஏவி வகுப்புக் கலகத்தை அங்குரார்ப்பணம் செய்தார், அன்றுதொட்டு இன்றுவரை பல கலகங்கள் நடந்துவிட்டன. இந்தியாவும் ஜின்னு விரும்பியாங்கு பாகிஸதான், இந்தியா என்ற இரண்டு கூறுகளாகப் பிரிக்கப்பட்டுவிட்டது. பூரணசுயராச்சியத்துடன் இரண்டு பாகங்களும் இன்று இயங்குகின்றன. ஆனல் சென்ற ஆண்டு ஆரம்பமான வகுப்புக் கலவரங்கள் இன்னும் ஓயவில்லை.

பாஞ்சாலத்திலே—அதுவும் மேற்குப் பாஞ்சாலத்திலே முஸ்லீம்கள் பாகிஸ்தான் கிடைத்து விட்டதும் தாங்களே சர்வாதிகாரிகள் என்று பேய்த்தனமாக எண்ணி ஹிந்துக்களையும் சீக்கியர்களையும் உபத்திரவப் படுத்தியதன் எதிரொலி, கிழக்குப் பாஞ்சாலத்தில் அதே முஸ்லீம்களுக்கு விரோதமாக முடிந்தது. இதன் பயனாக ஏறக்குறைய 3 லட்சம் ஜனங்களுக்குமேல் மாண்டனர் என்று சொல்லப்படுகிறது. இப்படியான வகுப்புக் கலகங்களை மாற்றுதற்குச் சிறந்த மார்க்கம் மேற்குப் பாஞ்சாலத்தில் உள்ள ஹிந்துக்கள்-சீக்கியரைக் கிழக்குப் பாஞ்சாலத்திற்கும், கிழக்குப் பாஞ்சாலத்தில் உள்ள முஸ்லீம்களை மேற்குப் பாஞ்சாலத்திற்கும் அனுப்புதலான ஜனமாற்ற முறையைக் கைக்கொள்ளுவதே என்று இந்தியஅரசாங்கமும் பாகிஸ்தானும் நிச்சயித்து அந்த ஜன மாற்றத்திக்கான வேலைகளைச் செய்து வருகின்றன.

பாஞ்சாலக்கலகம் இவ்வளவில் இருக்க, சிந்து மாகாணத்தின் (பாகிஸ்தான்) தலைநகரமாகிய கரைச்சியிலும் இப்போது வகுப்புக் கலவரங்கள் தோன்றி, அந்நகரம் இன்று இராணுவச் சட்டப்படி பரிபாலிக்கப்படுகின்றது.

மேற்குப் பாஞ்சாலத்தில் இருந்து வெளியேறிய ஹிந்துக்கள், சீக்கியர் பலர் ஹிந்து மாகாணங்களுக்குச் சென்று குடியேறுகின்றார்கள். இவர்கள் அந்த அந்த

தொடர்ச்சி 4 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் படும்பாடு

3-ம் பக்கத் தொடர்ச்சி

மாகாணங்களில், தமக்கு முஸ்லீம் காடையர்களால் நிகழ்ந்த அக்கிரமங்களைக் கூற, ஹிந்துக்கள் ஆத்திரம் கொண்டு, தம்முடனிதுவரை வசித்த முஸ்லீம்களைத் தாக்கி வருகின்றனர். இப்படியான கருமம் இன்று டெல்கியில் நிகழுகின்றது. தங்கள் சகோதரரான ஹிந்து—சீக்கியர்க்கு மேற்குப் பாஞ்சால முஸ்லீம்கள் இழைத்த இன்னல்களுக்குப் பழிக்குப் பழிவாங்கி வருகிறார்கள். புதுடெல்ஹியில் வகுப்புக் கலகம் மிகவும் மும்முரமாக நடைபெறுகின்றது. கலகத்தை யடக்குதற்கு வல்லபாய் படேல் கண்டிப்பான உத்தரவுகள் கொடுத்திருக்கிறார். கலகக்காரரைக் கண்டவுடன் சுட்டுவிட உத்தரவு அளித்திருக்கிறார். தப்படி 11 பேர் சென்ற புதன்கிழமை சுடப்பட்டிருக்கின்றனா. பண்டிதநேருவும அவர் சகாக்களும் கலவர இடங்களுக்குச் சென்று ஜனங்களைச் சாந்தப்படுத்தி வருகிறார்கள். அவர் ஓரிடத்திற் சென்றபோது, ஆயுதபாணிகளான கலகக்காரர் அவரைக் கண்டதும் "காந்திக்கு ஜே", "நேருவுக்கு ஜே" என்று கோஷமிட்டனர். மகாத்மாகாந்தியின் தத்துவத்தை யறியாது அவருடைய கொள்கைகளைக் கடைப்பிடிக்காது பலாத்காரத்தில் இறங்கும் பழிக்குப் பழி வாங்க முனையும் இவர்கள் "காந்திக்கு ஜே" கோஷம் இடுதல் அடாது என்று நேருஜி பட்டவர்த்தனமாகக் கண்டித்தார்.

வகுப்புக் கலவர நிலைமை இவ்வாருக, பாகிஸ்தானில் ஜின்னு சாய்பு பொருளாதார விஷயமாகத் திருகத் திருக விழிக்கிறார். பாகிஸ்தான் தலைநகரமாகிய கரைச்சியிலும் லாகூர் முதலாம் நகரங்களிலும் இதுவரை ஹிந்துக்களும், சீக்கியரும்தான் அனேக வங்கிகளை வைத்து நடாத்தி அந்நாட்டுமக்களுக்குப்பணம்உதவிவந்தனர். வகுப்புக்கலவரம் காரணமாகவும், பாகிஸ்தான் அரசாங்கத்தின் திறமையில் நம்பிக்கையீனம காரணமாகவும், இந்த வங்கிகள், தங்கள் முதற் பணத்தையெல்லாம் இந்தியப் பிரதேசங்களுக்கு மாற்ற முயற்சித்தன. அப்படி முயற்சி செய்து, பல கோடிக்கணக்கான முதற் பணம் பாகிஸ்தானைவிட்டு வெளியேறி விட்டது. இப்படி இனியும் வெளியேறுமானல் பாகிஸ்தானுடைய பொருளாதார நிலைமை பங்கப்பட்டுவிடும் என்பதையறிந்த ஜின்னு, பாகிஸ்தான் பிரதேசத்தில்உள்ள வங்கிகளின்பணம் வெளியிடங்களுக்கு மாற்றப்பட வொண்ணுது என்று ஓர் அவசரச் சட்டம் விதித்தார். உடனே அங்குள்ள வங்கி முதலாளிகள் பண்டித நேருவுக்கும் இந்திய அரசாங்கத்திற்கும் இவ்விஷயத்தை அறிவித்தனர். அவர் ஜின்னு அரசாங்கத்துடன் கண்டிப்பான பேச்சு வார்த்தைகள் நிகழ்த்திய தன் பயனுக, ஜின்னு தம்முடைய உத்தரவை இப்போது தவிர்த்துக் கொண்டார். ஹிந்துக்களும் சீக்கியரும் தம் முதற் பணத்தைப் பாகிஸ்தானிலிருந்து அகற்றியதன் பயனுக, பாகிஸ்தானில் உள்ள ஏழை முஸ்லீம்களுக்கு அவர்களுடைய பல தொழில்களுக்குப் பணம்உதவ யாரும் இல்லை

இனி வகுப்புக் கலகங்கள் சம்பந்தமாகவும் பாகிஸ்தான் அரசாங்கத்துக்குப் பெருஞ் சேதம் ஏற்பட்டுவிட்டது. லாகூர் நகரசபைக்கு 25 லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுவிட்டது. ஹிந்துப் பிரதேசங்களி விருந்து வரும் முஸ்லீம்களை ஆதரிக்கப் பாகிஸ்தான் அரசாங்கத்தின் வருவாய் போதாது. இன்ன பிற ஏதுக்களால் பாகிஸதான் "கவர்ணர் ஜெனரல்" ஜின்னு சாய்பு இன்று விழிக்கிறார்.

## செல்வர்கள் கடமை

காந்திஜீக்கு கல்கத்தா முஸலிம் வர்த்தகர்கள் கிராண்ட் ஓட்டலில் அளித்த வரவேற்புக்கு, காந்திஜீ பதிலளிக்கையில் பேசியதாவது:—"பணக்காரர்கள் வைத்திருக்கும் பணம் அவர்களுடையதல்ல. அது பொது ஜனங்களுடைய சொத்து. பணக்காரர்கள் அதன் தர்மகர்த்தர்களேயாவர். ஆகவே, ஆபத்துக் காலங்களில் பொது ஜனங்களுக்கு உதவி செய்யவேண்டியது பணக்காரர்களது பெரும் கடமையாகும்."

# அறிவித்தல்

பின்வரும் அரசினர் தோட்டங்களிலிருந்து கீழ்க்காணும் புகையிலை வாங்க விரும்புவோர் புரட்டாசிமீ 25ந் திகதி காலமே 12 மணிக்குமுன், போதனை, கிருஷிக இலாகா, புகையிலை உத்தியோகத்தருக்கு அறிவித்தல் வேண்டும்,

சிடைக்கும் இடங்களும் தொகைகளும்

| | |
|---|---|
| போதனை புகையிலைப்பதிக்கந்தோர் | |
| சுருட்டுப் புகையிலை | |
| 1ம் வகுப்பு ஏறக்குறைய | 10 ரூ |
| 2ம் ,, | 10 ,, |
| 3ம் ,, | 10 ,, |
| 2 டப்புல்லைத் தோட்டம் | |
| சுருட்டுப் புகையிலை | |
| 1ம் வகுப்பு | 63 ,, |
| 2ம் ,, | 79 ,, |
| 3ம் ,, | 387 ,, |
| பீடிப் ,, | 222 ,, |
| சுருட்டு (உள்இலை) | 50 ,, |
| 3 நாலந்தை மாதிரித்தோட்டம் | |
| சுருட்டுப் புகையிலை | |
| 1ம் வகுப்பு | 22 ,, |
| 2ம் ,, | 36 ,, |
| 3ம் ,, | 20 ,, |
| பீடிப்புகையிலை | 11 ,, |
| சுருட்டு (உள்இலை) | 30 ,, |
| 4 கணவத்தை மாதிரித்தோட்டம் | |
| சுருட்டுப் புகையிலை | |
| 1ம் வகுப்பு | 119 ,, |
| 2ம் ,, | 176 ,, |
| 3ம் ,, | 195 ,, |
| பீடிப்புகையிலை | 100 , |
| 5 மினிப்பை மாதிரித்தோட்டம் | |
| பர்மா சுருட்டுப் புகையிலை | |
| 1ம் வகுப்பு | 44 ,, |
| 2ம் ,, | 24 ,, |
| 3ம் ,, | 22 ,, |
| வாஷிங்டன் | |
| 1ம் ,, | 56 ,, |
| 2ம் ,, | 52 ,, |
| 3ம் ,, | 56 ,, |
| லங்காஸ்டர் | |
| 1ம் ,, | 111 ,, |
| 2ம் ,, | 52 ,, |
| 3ம் ,, | 74 ,, |
| தட்டையன் சுருட்டுப் புகையிலை | |
| 1ம் வகுப்பு | 89 ,, |
| 2ம் ,, | 42 ,, |
| 3ம் ,, | 57 ,, |
| குறுகிய இலையன் | |
| 1ம் ,, | 147 ,, |
| 2ம் ,, | 57 ,, |
| 3ம் ,, | 39 ,, |
| ஸ்பானிய கலவன் | |
| 1ம் ,, | 83 ,, |
| 2ம் ,, | 67 ,, |
| 3ம் ,, | 97 ,, |
| தம்பராகான் | |
| 1ம் ,, | 84 ,, |
| 2ம் ,, | 57 ,, |
| 3ம் ,, | 54 ,, |
| தம்பராசெட்டி | |
| 1ம் ,, | 66 ,, |
| 2ம் ,, | 32 ,, |
| 3ம் ,, | 52 ,, |
| 6 வாரியப்போலை மாதிரித்தோட்டம் | |
| சிகரற் புகையிலை வெக்கைப்பண்பாடு | |
| 1ம் வகுப்பு | 109 , |
| சிகரற் புகையிலை இயற்கைப் பண்பாடு | |
| 1ம் வகுப்பு | 150 ,, |
| 2ம் ,, | 250 ,, |

2 வேறு விபரங்கள் மேற்கூறிய உத்தியோகத்தரிடமிருந்து நேரில் அல்லது தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம். இவருடைய கந்தோரில் மேற்கூறிய புகையிலைகளின் மாதிரிகள் பார்வையிடலாம். முழுத்தொகையையும் பார்வையிட விரும்புவோர் அவ்வத் தோட்டங்களிற்றூனே பார்வையிடவேண்டும்.

3 இதன்பொருட்டு. விண்ணப்பித்தவிலை உடன்படிக்கைகளை போதனை கிருஷிக அதிபர் தள்ளிவிடவும் அதிகாரமுண்டு.

போதனை, கிருஷிக அதிபர்,
27—8—47. இலங்கை.
G 90 12, 19—9—47.

# திருச்சி ரேடியோ

**சனி செப்டம்பர் 13**

காலை 7—15 கீதாரம்பம் 7—20 தமிழில் செய்திகள் 7-30 கே தங்கம்மா பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருப்பாபுலியூர் ஆர். வெங்கடராமய்யர் வயலின் 1—30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 ஆங்கிலத்தில் பேச்சு 2 தமிழில் செய்திகள் 2-15 ஆந்தகுடி ஆர். ராமமூர்தி பாட்டு 2.45 ஒலிபரப்பு முடிவு

மாலை 5 கே. தங்கம்மா பாட்டு 5 40 அருட்பா திருவந்தாதி விளக்கம் 6.00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7-00 ஆந்தகுடி ஆர். ராமமூர்த்தி பாட்டு 7-15 ராணுவத்திலிருந்து திரும்புவோர்க்கு சமூக பாதுகாப்பு 7-30 தமிழில் செய்திகள் 7-45 மதராஸில் உள்ளபடி 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 வர்ணக்கயிறு தொடர்கதை 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் : வானிலை (ஆங்கிலம்) 9-45 வீணை விதார் 10 இசைவேளை இசைத்தட்டு 10—30 ஒலிபரப்பு முடிவு

**ஞாயிறு செப்டம்பர் 14**

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7—30 தர்மபுரம் எம். சுப்ரமணிய முதலியார் பாட்டு 8—00 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 வாத்ய கோஷ்டி இசைத்தட்டு 8-30 டி. பி. எ. முத்துகுமாரசுவாமி வீணை 9—00 ஒலிபரப்பு முடிவு

12 கதம்பம் இசைத்தட்டு 12-30 அள்ளற்பழனம் மூகப்புச்சித்திரம் 12 35 வாழ்வது மாயம் — நாடகம் 12—45 கார்மேகம் — பருவச்சித்திரம் 1 மணிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 கல்லிடைக்குறிச்சி எ. பாலசுப்ரமணிய பாகவதர் இசை இசைத்தட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 பெண்ணுலகம் 2-30 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 3 ஒலிமலர் முடிவு

மாலை 5 தர்மபுரம் எம். சுப்ரமணிய முதலியார் பாட்டு 5-40 தேவாராதனை ரோமன் கத்தோலிக் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 டி. பி. எ. முத்துகுமாரசாமி வீணை 7—30 தமிழில் செய்திகள் 7-45 சினிமா சாதனம் 8 ராமநாதபுரம் எம். என். நடராஜ பிள்ளை புல்லாங்குழல் தஞ்சாவூர் ஆர். நடராஜன் வயலின் காரைகுடி நடேசய்யர் மிருதங்கம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9¼ நூல் வகை இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் ; வானிலை (ஆங்கிலம்) 9¾ ஸ்ரீ வைகுண்டம் எஸ் பரமசிவம் பிள்ளை பாட்டு 10 இசைவேளை இசைத்தட்டு 10—0 ஒலிபரப்பு முடிவு

**திங்கள் செப்டம்பர் 15**

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 அருப்புக்கோட்டை எஸ். ராசரத்தினம்பிள்ளை நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 புதிரபாடல்கள் 8-30 வி வேதவல்லி பாட்டு 9 ஒலிபரப்புமுடிவு

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கே. வி. ஜயராமய்யர் வயலின் 2 தமிழில் செய்திகள் 2-05 கே வி. ஜயராமய்யா வயலின் 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 ஒலிபரப்பு முடிவு

மாலை 5 அருப்புக்கோட்டை எஸ். ராஜரத்னம் பிள்ளை நாகஸ்வரம் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6. 0 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 உமையாள்புரம் ஜி. கல்யாணராமய்யர் பாட்டு 7-15 சித்ரகானம் இசைத்தட்டு 7-30 தமிழில் செய்திகள் 7-45 சுய நிர்ணய சமுதாயம் சுய நிர்ணயம் 8 கே. வி ஜயராமய்யர் வயலின் 8-30 உமையாள்புரம் ஜி. கல்யாணராமய்யர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9–15 என். வி. வசந்தகோகிலம் இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் : வானிலை (ஆங்கிலம்) 9 45 டி. என். மரியானந்தம் பாட்டு 10 இசைவேளை இசைத்தட்டு 10.30 ஒலிபரப்பு முடிவு

**செவ்வாய் செப்டம்பர் 16**

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 வி. பி. வேதவியாசராவ் பாட்டு 8-00 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 நூல் வகை இசைத்தட்டு 8-30 டி. பி. சிவசங்கரம் பிள்ளை புல்லாங்குழல் 9 ஒலிபரப்பு முடிவு

1 கதம்பம் இசைத்தட்டு 1—30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி. பி. சிவசங்கரம் பிள்ளை புல்லாங்குளல் 2 தமிழில் செய்திகள் 2-05 டி. பி. சிவசங்கரம் பிள்ளை புல்லாங்குழல் 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 ஒலிபரப்பு முடிவு

மாலை 5 வி. பி. வேதவியாசராவ் பாட்டு 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 தாளவாத்ய கச்சேரி 7-30 தமிழில் செய்திகள் 7-45 கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை வயலின் பழனி எம். சுப்ரமணிய பிள்ளை மிருதங்கம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 சித்தூர் சுப்ரமணிய பிள்ளை இசைத்தட்டு 9–30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை (ஆங்கிலம்) 9-45 இரு வீணைகள் 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10-30 ஒலிபரப்பு முடிவு

**புதன் செப்டம்பர் 17**

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 டி. டி. சரஸ்வதி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8–15 ரேடியோ வாத்தியகோஷ்டி 8-30 கே. வி. சுப்ரமணியம் பாட்டு 9 ஒலிபரப்பு முடிவு

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி. டி. சரஸ்வதி பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 டி. டி. சரஸ்வதி பாட்டு 2.15 கல்வி ஒலிபரப்பு 2-45 ஒலிபரப்பு முடிவு

மாலை 5 வி. ஆர். ரங்கநாதன் புல்லாங்குழல் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 திரைக்குப்பின் நாடகம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 சித்ரகானம் இசைத்தட்டு 8 கே. வி. சுப்ரமணியம் பாட்டு 8-30 வி. ஆர். ரங்கநாதன் புல்லாங்குழல் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 சித்ரகானம் இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள்: வானிலை (ஆங்கிலம்) 9-45 ஐரோப்பிய சங்கீதம் இசைத்தட்டு 10.30 ஒலிபரப்பு முடிவு.

**வியாழன் செப்டெம்பர் 18**

காலை 7 15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-39 மதுரை பி எம் வெங்கடகிருஷ்ணன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 வாத்யஇசை இசைத்தட்டு 8 30 ஆர் வி சுந்தரமய்யர் வீணை 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 பெண்ணுலகம் 2 தமிழில் செய்திகள் 2-05 நூல்வகை இசைத்தட்டு 2.15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 மதுரை பி எம் வெங்கட கிருஷ்ணன் பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவுப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்திரகானம் இசைத்தட்டு 7-15 செய்திவிளக்கம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 டி வி நமசிவாயம் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 டி கே பட்டம்மாள் இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்துசெய்திகள் 9 45 ஆர் வி சுந்தரமய்யர் வீணை 10 30 முடிவு.

**வெள்ளி செப்டெம்பர் 19**

காலை 7–15 கீதாரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7-30 என் வி நுக்மணி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 திருச்சி வாத்யகோஷ்டி 8 30 எஸ் பாண்டுரங்க பாகவதர் பாட்டு 9 முடிவு.

1 நூல்வகை இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 என் வி நுக்மணி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 எஸ் பாண்டுரங்க பாகவதர் பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 பி எல் சுப்புலட்சுமி பாட்டு 5 40 நூான்ஷர்ப் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 பி எல் சுப்புலட்சுமி பாட்டு 7.30 தமிழில் செய்திகள் 7-45 சொல்லம்பு 8 செம்பொன்னர் கோயில் எஸ் ஆர் கோவிந்தசாமிபிள்ளை நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 தென்னிந்தியநாட்டுப் பாடல்கள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் 9-45 நூல்வகை 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10-30 முடிவு.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக் கதை

2 ம் பக்கத் தொடர்ச்சி

னுள்; சிலநிமிஷம் அவள் வார்த்தையாடாதவளாய் நிலத்தைப் பார்த்த வண்ணம் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியவள்போலிருந்தாள்; தன் காதலியின் ஊடலைக் கண்ட காதலன் கவலைகொண்டானாய், "கண்ணே, என் காதலியே, ஏன் மௌனஞ் சாதிக்கிறீர்? என்னுடன் கோபமா? ஏதும் மனஸ்தாபமா?" எனப் பரிவுடன் கேட்டலும், காதலி "எனக்கு உங்கள்மேற் கோபமுமில்லை. மனஸ்தாபமுமில்லை; நான் சும்மா மௌனஞ் சாதிக்கிறேன்" என்றாள்; "சும்மா மௌனஞ் சாதிக்கிறதென்றால், அது எனக்கு விளங்கவில்லை" என்று கணவன் முறுவலுடன் கேட்க, "நீங்கள் சும்மா சிரிக்கவில்லையா, அப்படியே நானும் சும்மா மௌனஞ் சாதிக்கிறேன்" என்று பதில் சொன்னாள் பாக்கியலட்சுமி; "என் அன்பே, உமக்கொளித்து எனக்கேதும் இரகசியமில்லை; இதனை நம்பும்; நான் சிரித்ததற்குக் காரணத்தைச் சொன்னால் நீர் எனமீது கோபிப்பீரென்றெண்ணித்தான் சொல்லப்பயப்படுகிறேன். கோபிக்கமாட்டேனென்று உறுதி பண்ணித் தந்தாற்றான், சிரித்ததற்குக் காரணஞ் சொல்வேன்" எனக் கூறலும், "நான் ஒருபோதும் கோபிக்கமாட்டேன், மனவருத்தப்படமாட்டேன்; இது சத்தியம்; உண்மையைச் சொல்லுங்கள்" என்றுஇதமுறக் கேட்டாள் இல்லாள்.

"ஊழிற் பெருவலி யாவுள"

"அன்புக்கினியாளே, நான் ஒரு பாக்கியத்தைப் பெறுதற்குப் பலநாள் ஆசைப்பட்டு முயற்சி செய்தேன்; அந்தப் பாக்கியம் கிட்டாதெனக் கண்டு வெட்டென மறந்தேன்; பின் அது கிட்டியதுபோற் காணப்பட்டது; கிட்டியபின் பார்த்தேன்: அது நான் ஆசைப்பட்ட பாக்கியத்தைக் காட்டிலும் மேலான பாக்கியமெனக் கண்டேன்; அதனாற்றான் சிரித்தேன்" என்று காதலன் கனிவுடன் மொழிந்தான்; "நீங்கள் சொல்வதிலொன்றும் எனக்குப் புலப்படவில்லை" என்றாள் பாக்கியலட்சுமி: "என் பாக்கியமே, நான் என் முதற்றாரத்தை யிழந்தபின் மலாய்காட்டிலிருந்து ஊருக்கு மீண்டுவந்து இரண்டாந் தாரங்கொள்ள முயற்சி செய்தபோது, உமது அரிய தமக்கையாரையும் மணம்பேசுவித்தேன்; உங்கள் ஆச்சி தமது மகளுக்குச் சொந்த மைத்துனரொருவர் இருக்கிறாரெனச் சொல்லி எனக்கு உமது தமக்கையாரை மணஞ்செய்ய இசைபாதொழிந்தனர்; உமது தமக்கையாரின் பெயர் பாக்கியம் என்பதை அப்போதே கேள்விப்பட்டிருந்தேன்; அதன்பின்னர் பரிமளமென்றொரு கன்னிகைக்கு மணம்பேசுவித்தேன்; அதுவுங் கைகூடாமற் போயிற்று; விதியிருந்தாற்றானே எதுவுங் கைகூடும்; நீர் என்னை அடையவேண்டுமெனவும, நான் உம்மை அடையவேண்டுமெனவும் நியதியிருந்தால், எவர் வேறு எத்தனை முயற்சி செய்தாலுங் கைகூடுமா? இந்த இரகசியத்தை யறியாமலா எங்கள் வள்ளுவனார்,

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான் முந்துறும்"

என்று அக்காலத்திலே பாடியது; இரண்டாவதாகப் பரிமளத்திற்குப் பேசி பொழுங்குசெய்த கல்யாணம் கடைசி நேரத்திலே குழம்ப நேர்ந்தால், அந்தப்பெண்ணுக்கெனச் செய்வித்து வைத்திருந்த தாலி முதலியவை, கொடுக்கும்படி வைத்திருந்த சன்மானங்கள், வாங்கி வைத்திருந்த கூறை சேலைகள் ஆகிய எல்லாவற்றையுமெடுத்துக்கொண்டு கல்யாணஞ் செய்யவேண்டுமென்ற நோக்கத்தையுஞ் சோரவிட்டு, பிறந்தவூரையும் விட்டு இன்னமும் பொருள் ஈட்ட வேண்டுமென்ற ஊக்கங் கொண்டு மலாய்நாட்டிற்கு இந்தக் கப்பலிற் புறப்பட்டேன்; இக் கப்பலில் வரும்போதே உங்களுடன் வரும் இராமனையும் உங்கள் ஆச்சியையும் ஒருநாள் உம்மையும் காணப்பெற்றேன்; இராமனுடன் நான் வார்த்தையாடிய போது உங்கள் ஆச்சியின் மகள் நீர் தானென்றும், உமது பெயர் பாக்கியமென்றும் நான் விளங்கிக்கொண்டேன்: அதனால் முந்தி நான் கல்யாணம் பேசுவித்து இசையாத பாக்கியமென்னுங் கன்னிகையைத்தான் இப்பொழுது கல்யாணஞ் செய்யப் போகிறேனென்றுஎண்ணிவிட்டேன்; ஆனால்கல்யாணம் இப்பொழுது நிறைவேறியவுடனேதான் நீர் வேறு பாக்கியம், உங்கள் தமக்கையார் வேறு பாக்கியமென்பதை விளங்கினேன்; இவைகளை யெல்லாம் யோசித்த போது என்னையறியாமலே சிரித்துவிட்டேன்; இவைகளெல்லாவற்றிற்குங் காரணம், உமக்கும் உமது தமக்கையாருக்கும் "பாக்கியம்" என்ற பெயர் பொதுமைத்தாக இருந்தமையே...." என்று கணவன் சொல்லும்போது மனையாள் "உங்களுடைய அபாக்கியந்தான் அந்தப் பாக்கியம் உங்களுக்குக் கிட்டாமல் இந்தப்பாக்கியம் வந்துசேர்ந்தது" என்று முகத்தைச் சுழித்துக்கொண்டு கிள்ளையெனப் பன்ன, "கண்ணே, என் கண்ணின் மணியே, நீர் ஒருபோதும் அப்படிச் சொல்லவும் நினைக்கவுமொண்ணாது: உம்மை என் அரிய இல்லக்கிழத்தியாகப்பெறும் பாக்கியத்தைப் பெற்ற எனக்கு வேறு பாக்கியமும் வேண்டுமா?" "காதலிருவர்கருத்தொருமித்து, ஆதரவுபட்டதே இன்பம்" என்பது எங்கள் முதாட்டி வாக்கு. அந்த இன்பம் உமக்கும் எனக்கும் பொதுவாக இருப்ப, நானாக, நீராக வேறு இன்பத்தை, வேறு பாக்கியங்களைக் கனவிலும் எண்ண வருமா? இல்லையே; கரும்பே, இப்படியெல்லாம் நான பேசுவதனால் உமது தமக்கையாரை அவமதிக்கிறேனென்று எண்ணிவிடவொண்ணாது; இந்த நிமிஷந் தொடக்கம் உமது தமக்கையாரை என் சகோதரியாகவே பாவித்து நடப்பேன்; இது சத்தியம்" என்று பயபக்தியோடு சொல்ல, பாக்கியலட்சுமி கேட்டுப் பெருமகிழ்ச்சியடைந்தாள்.

அவர்தான் இவர்

இவர்கள் இப்படி வார்த்தையாடிக் கொண்டு இருக்கும்போது இராமன் அவர்களுக்காகிய உணவுப்பொருளைக்கொண்டுஅங்கேவந்தான். தான் வரும்போது, காதலியுங் காதலனும் பரஸ்பரம் பாராட்டிய அன்பை அவதானித்து இராமன் ஒரு தமயன் அடையும் மகிழ்ச்சிபோன்ற மகிழ் சியை யடைந்தான்; இராமன் கொண்டுவந்த உணவுப்பண்டத்தைப் பாக்கிய இலட்சுமி பரிவுடன் வாங்கித் தன்னுயகனை உண்ணச் செய்துவிட்டு, தான் உண்ணாது ஒல்கிநிற்க, கணவன் "ஏன், நீரும் உடனிருந்து உண்ணலாமே" என்று அன்புபெருகக் கேட்க 'கணவன் உண்டபின் தான் நுகர்கொள்கையும்,எனக் காசிகண்டத்திலே சொல்லப்பட்டிருப்பது உங்களுக்குத் தெரியுந்தானே, நீங்கள் உண்ணுங்கள், பிறகு நான் உண்ணுகிறேன" எனலும் "உமது இட்டப்படி செய்யும்" என்று சொல்லித் தான் போசனஞ் செய்தான். போசனம் முடித்தவுடன் கணவனை மனையாள் பணிவுடன் நோக்கி "என் அக்காளுடன் இப்பொழுது மாத்திரம் போயிருந்து ஆகாரமுண்ண அநுமதி தருவீர்களா"என்றுகேட்க, "இப்பொழுது மாத்திரமல்ல, உமக்கு விருப்பமான வேளையிலெல்லாம் நீர் உமது தமக்கையாரோடும் தாயாரோடும் போயிருந்து போசனம்பண்ணலாம்" என்று சொல்ல, பாக்கியலட்சுமி [illegible] லம் வழ[illegible] இராமனுடன் கூடிக்கொண்டு தாயும் தமக்கையும் இருக்குமிடத்திற்குப் போதலும், அவள் வரவைக்கண்ட அவர்களிருவரும் அதிக சந்தோஷமடைந்தார்கள்; இதறகிடையில் இராமன் கண்ணகியம்மையைப் பார்த்து "ஆச்சி எங்கள் சின்னத்தங்கைச்சி உங்களுடனிருந்து உணவுகொள்ள விரும்புவதாகச் சொல்லிவிட்டு இங்கே வந்தமையினால் நீங்கள் எல்லீரும் ஆகாரம்பண்ணுங்கள்" எனலும், "மகனே, அவரைக் கேட்டுக் கொண்டுதானே இங்கே வந்தாய்" என்று கேட்க "கேளாமல் வருவேனோ ஆச்சி" என்றாள் பாக்கியலட்சுமி. "கேளாமல் வரப்போவதில்லை எங்கள் தங்கைச்சி, கேட்டால் உத்தரவு கொடாமல் விடப்போவதில்லை உங்கள் மருமகன்" என்று சிரித்துக் கொண்டு சொன்னான் இராமன்; [illegible]ருந்து போசனஞ் [illegible] இராமனும் இன்னொரு இடத்திலிருந்து உணவருந்தினன்; அப்பொழுது பாக்கியலட்சுமி தன்னுயகன் தனக்குச் சொன்ன வரலாறு முழுவதையும் தாய்க்கும் தமக்கைக்குஞ் சொலலி "அவர்தான் இவர்" என்று முடித்தாள், கேட்ட தாய் அற்புதமடைந்தாள்; தமக்கை நாணமடைந்தாள்; அந்த ஆண்டவன் அருளின்படி எதுவும் நடக்குமேயொழிய எங்கள் முயற்சியினாலும் ஏதும் நடப்பதுண்டோ" என்று சொல்லிச் சந்தோஷப்பட்டாள் கண்ணகியம்மை; போசனம் அருந்தியபின் நாயகனிருக்குமிடத்திற்கு மீண்டாள் பாக்கியலட்சுமி. (வரும்)

## டக்ரர் ஆனந்த குமாரசுவாமி

### உலகப் பேரறிஞர் மறைந்தார்

போஸ்டன் அருங்கலைக்காட்சிச் சாலையில் இந்திய, பாரசிக, இஸலாமியக் கலைகளைப்பற்றிச் சென்ற 30 வருடகாலமாகஆராய்ச்சிகள் நடத்திவரும் டாக்டர் ஆனந்த கே. குமாரசுவாமி தமது 70 வது வயதில் காலமானார்.

இலங்கையைச் சேர்ந்த டாக்டர் குமாரசுவாமியை பேரறிஞர்களில் ஒருவரென்று காட்சிச்சாலை அதிகாரிகள் வர்ணிக்கின்றனர். அவருடைய மேற்பார்வையின் கீழ்த்தேசுக் கலைகள், இந்திய பாரசீகக் கலைகள் ஆகியவை சம்பந்தமான பல அரிய பொருள்கள் காட்சிச்சாலையில் சேமித்துவைக்கப்பட்டிருக்கின்றன. இந்திய—இந்தோனேஷிய கலாசாரசரித்திரம் என்ற மகுடத்துடன் வெளியிட்ட புத்தகம் உட்பட அவர் அநேக அரிய நூல்களை வெளியிட்டிருக்கிறார்.

சென்ற மாதம்தான் இலங்கையில் டாக்டர் ஆனந்த குமாரசுவாமியின் 70-வது பிறந்ததினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கொழும்பில் நடைபெற்ற ஒரு கூட்டத்துக்கு மே. த. கவர்னர் அனுப்பியிருந்த ஒருசெய்தியில் அகில உலக பேரறிஞர்களில் டாக்டர் குமாரசுவாமியும் ஒருவர் என்று குறிப்பிட்டிருந்தார். கீழ்நாட்டவரின் நல்லெண்ணத் தூதாக மேல்நாட்டவரிடையே டாக்டர் குமாரசுவாமி கலாசேவை புரிந்துவருவதை சர். சார்ல்ஸ் காலின்ஸ் அதே கூட்டத்தில் பாராட்டிப் பேசினர்.

## 3-வது யுத்தம்


### அராபியரின் எச்சரிக்கை

பலஸ்தீனம் சம்பந்தமாக ஐக்கிய தேச ஸ்தாபனத்து விசாரணைச்சபை சமர்ப்பித்த அறிக்கையைக் கண்டித்து அராபியரின் உயர்தர மன்றம் ஓர் கண்டன அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. மேற்படி விசாரணைச் சபையின் அறிக்கை ஓர்தலைப்பட்சமானதென்றும், அதன் அங்கத்தவர் சிலர் யூதர்களுக்குச் சாதகமானவர் என்றும குறித்த கண்டன அறிக்கையிற் காணப்படுகிறது. மேலும் அவ்வறிக்கை கூறுவதாவது:

"பலஸ்தீனத்திலே ஓர் பிடி மண்ணில்தானும் யூத ராஜபத்தை ஏற்பட நாம் விடமாட்டோம. சர்வதேச சூழ்ச்சிக்காரரின் மாயாஜாலங்களுக்கு அராபியராகிய நாங்கள் ஓர்போதும் பணியமாட்டோம்; இனி ஓர் யூதனேனும் எங்கள் புனித நாட்டிற் குடியேற விடமாட்டோம். பலஸ்தீனத்தைப் பூரண சுதந்திர அராபிய நாடாக்குவதே இந்தப்பிரச்சினையைத் தீர்க்கச் சரியான மார்க்கமாகும்.

'எங்கள் பிறப்புரிமைக்கு விரோதமாக, யூதர்களை இங்கே இன்னும் புகுத்தி ஓர் யூத ராஜபத்தை இங்கே ஸ்தாபிக்க, ஐக்கியதேச ஸ்தாபனம் முயலுமானால், மூன்றாவது உலகமகா யுத்தத்துக்கு நிச்சயமாக விதை போட்டதுபோலாகும்."


## உங்கள் சங்கீதக் கருவிகள் பழுதடைந்துவிட்டனவா?



அப்படியானால் உடனே எம்மிடம் கொண்டுவாருங்கள்
3 வருட உத்தரவாதத்துடன் புத்தம்புதிதாய் பழுதுபார்த்துத் தருகிறோம்
[ எவ்வித நிலைமையில் உள்ளதாயினும் சரி கட்டணம் வெகு சகாயம் ]
கல்கற்றுமோகன்புளூட் ஹார்மோனியக் கம்பெனி,
சிவலிங்கப்புளியடி, 484, K, K. S. றேட், யாழ்ப்பாணம்.

Std 34 12—9—47 To 9—12—47


### சால்நிலை

அயலூர்களில் இரண்டு மூன்று தினங்களாக இடையிடையே மழை பெய்கிறது; இந்த வண்ணார்பண்ணையில் மாத்திரம் இன்னமும் மழை பெய்யவில்லை; ஆனால் இப்பொழுது மழைக்கோலம் காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலேயாவுக்கு நாகபட்டணம் மார்க்கமாக
# கப்பல் சீட்டு
[ மாசமிருமுறை கப்பல்கள் போகின்றன ]

யாழ்ப்பாணமிருந்து றெயில்வே ரிக்கற், சாப்பாடு, லக்கேஷ்சார்ஷ் இருப்பிடச்செலவு எல்லாம் உட்பட நாகபட்டனமிருந்து பினங் செல்ல டேக் ரிக்கற் ரூபாய் 130 க்கு எங்கள் மூலமாக பெற்றுக் கொள்ளலாம்

**வேறு செலவு உங்களுக்கு இல்லை**

பல நூற்றுக்கணக்கானோர் எங்கள் மூலமாகப் பிரயாணஞ்செய்து திருப்தியடைந்து கொடுத்த நற்சாட்சிகள் அநேகம் உண்டு.

**வடஇலங்கையில் இவ்வகையில் முதல்ஸ்தானம் வகிக்கிறோம்**

எங்களிடம் மற்ற விபரங்களை நேரிலோ லெட்டர் மூலமோ தெரிந்துகொள்ளலாம்.

ஸ்ரீ கதிர்வேல் அன்கோ,
252, காங்கேசன்துறைரேட்
சிவன்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

தந்தி (Srivel)
பிராஞ்சு: நாகபட்டணம்.

Std3 ɜ7—9-47&

## ஏன் கூடாது?
1-ம் பக்கத் தொடர்ச்சி

மக்களுக்கு விளங்காது. சிவஞான சித்தியார்க்கு உள்ள உரைகள் பெரும்பாலும் மணிப்பிரவாளமாக இருக்கின்றன. தேவார திருவாசக திருமந்திர முதலியவைகளின் கருத்தை யாவரு நன்றாக அறிந்துகொள்ளலாமே என்றால் அவற்றுக்கும் உரை தக்கபடி அமையவில்லை வைணவர் தமிழ் வேதமாகிய திருவாய்மொழிக்கும் அதன் துணைகளுக்கும் இருக்கும் உரைகளைப் படித்துப் பார்த்தவர் படிக்கக் கேட்டவர், பொருள் விரிக்கும் கூட்டத்தில் இருந்தவர் இப்படியே நம் தேவாரத்துக்கும் திருவாசகத்துக்கும் திருமந்திரத்துக்கும் இருக்கலாகாதா என்று நினைப்பது நியாயம்தான். ஒழுங்கான உரைகள் அமையாத குறையால் அநேக அரிய பாசுரங்களின் இன்பச்சுவையை நாம் இழந்து வருகின்றோம்.

சைவ ஆகமங்கள் பல உண்டு என்கிறார்களே. அவற்றில் ஒன்றிரண்டாவது நல்ல தமிழ் மொழிபெயர்ப்போடு வெளிவந்தால் ஆலயவழிபாட்டின் உண்மைகள் பொதுமக்களுக்கு எல்லாம் விளங்குமே. ஆலயங்களையெல்லாம் திறந்துவிட்ட பிற்பாடு ஆகமங்களை மறைத்து வைப்பதால் விளையும் பயன் என்ன? சைவமத வுண்மைகள் நாடெங்கும் தெளிவாகப் பரவவேண்டுமாயின் சைவசாத்திரப் பயிற்சியுள்ளவர்கள் பொதுமக்களுக்கு விளங்காத சாத்திரங்களை விளங்கும்படிச் செய்யவேண்டும். இப்படியே நம் நாட்டில் உள்ள ஒவ்வொரு மதத்துக்கும் செய்யவேண்டிய கடமைகள் உண்டு. இவற்றைச் செய்த பிற்பாடு அயல் மதத்தார் நம் மக்களை ஏமாற்றி இழுத்துப்போக இயலாது என்று நாம் உறுதியாகக் கூறலாம். இந்த மத கைங்கரியத்தில் அறிவின் மிக்க மக்களில் ஒரு சிலரேனும் ஏன் இறங்கக்கூடாது? என்று காலம் வரும்!

—தொண்டன்

## ஹிந்தி—உருது

இந்த இரண்டு மொழிகளையும் தமிழ் மொழி மூலமாகவேனும், மலையாளப் பாஷை மூலமாகவேனும் இலகுவிற் பயிலுதல்கூடும்,

விரும்பினோர் விபரங்களுக்குப் பின்வரும் விலாசத்திற்கு எழுதி அறிந்துகொள்ளலாகும்.

அற்லஸ் ஹால்
தபாற்பெட்டி இலக்கம் 649
கொழும்பு

Std. 18. 29-8-47

## தந்தரோக சஞ்சீவி
### கந்தசாமி வைத்தியர்
### சந்தனாதித் தயிலம்

**ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ 2**

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சியாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது பத்தியம்: புகையிலையாகாது. ஆடினபல்லு உடனே இறுகும். முரசுவளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் சும்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப்பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.

சீசா முதலிய செலவு வேறு

விலாசம்:
ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை

Std 25 1-7-4େ—30.6.48 (வெ)

## பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
கி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to, 1—4—48

## வியாபாரத்திற்கழகு
## விளம்பரஞ் செய்தல்

# இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

## இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

தலைமைக்காரியாலயம்:- பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.
நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விங் ட்ரஸற் கம்பனி.
லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கினேஸ வங்கி.
கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி.
திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை
(பழைய நகரமண்டபம்)
யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:- 242, ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**
இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**சேமிப்புப் பணம்:-**
ஆகக்கூடிய தொகை ரூபா 10,000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

T. S. முத்துலிங்கசாமி
ஏஜெண்டு,

( Std 29 1-8—30-7-48) (F)

## கொழும்பு—சிங்கப்பூர் கப்பல் பிரயாணம்

மாதம் ஒருமுறை ஒழுங்காகச் செல்லும் கப்பலில் பிரயாணச்சீட்டு எம்மூலம் பெற்றுக்கொள்ளலாம். பிரத்தியேக வண்டியில் யாழ்ப்பாணமிருந்து பிரயாணம், கொழும்பில் தங்கும் வசதி யாவும் குறைந்த செலவில் ஏற்பாடு செய்யப்படும்.

நாகபட்டணம் பினங் பிரயாணிகளின் கட்டணம் 130 ரூபாவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

விபரம்:
எஸ். ஆர். எஸ். நாதன்,
21/3, ஸ்ரான்லி ரேட் யாழ்ப்பாணம்
[வின்சர்-வெலிங்டன் படமாளிகைகளின் மத்தியில்]

Std 23. 6-6-47—6 6-48

## விளம்பரம்

இப்பொழுது எங்கள் கைவசமுள்ள பற்கள் பிரபையுடையன; அழகிய இயற்கையானநிறமுடைய முரசு பொன்ற முரசோடு கூடியன; சராசரி ½ அவுன்ஸ் நிறையுள்ள பற்கள் இறகுபோலப் பாரமற்றன; ஆனால் ஒருபோதும் உடையாதன; முரசில் இலகுவாக மாட்டத்தக்கன: எங்களிடத்தில் ஒருமுறை வாங்கி உபயோகித்தாற்றான் இந்த உண்மைகள் உங்ளுக்குப் புலப்படும்.

பத்திரானு மாளிகை
[யாழ்ப்பாணம் அப்போதிக்கரிஸ கம்பனிக்கு எதிரேயுள்ளது]
யாழ்ப்பாணம்

Std 28 11-7—10-10-47.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna, on Friday, September 12, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org